பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : பங்குனி 21 (3—4—68) புதன் ★ வெளியூர் : பங்குனி 22 (4—4—68) வியாழன் [இதழ் : 243

காதில் விழுந்தது!

"மார்ச்சு மாதம் 25, 26-ம் நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்த 'கமிஷன்' நியமிக்கப்பட்டிருக்கிறதல்லவா ?"

"ஆமாம்."

"'அது வேண்டாம்; பொது விசாரணையே நடத்த வேண்டும்' என்று காமராசர் கேட்டிருக்கிறாரே, தெரியுமா ?"

"காமராசருக்கு ஒருவேளை தெரிந்திருந்தும், 'புரியாமல் இருக்கலாம்' என்பதற்காகத்தான், அமைச்சர் மாதவன், இதுபற்றி விளக்கம் கொடுத்திருக்கிறாரே !"

"அது சரி; ஆனால், அதற்குள் இன்னொருவர்— அதாவது பக்தவத்சலம்—என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா ?"

"என்ன புதிதாகக் கிளப்பியிருக்கிறார் ?"

"'மாணவர்கள் கூறியதைத்தான் மருத்துவக் கல்லூரிக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டீர்களே; அதற்குப் பிறகும் நீதி விசாரணை ஏன்' என்று கேட்டிருக்கிறார் முதலமைச்சரை நோக்கி !"

"சபாஷ் ! தமிழ் நாடு காங்கிரசில் இப்படிப்பட்ட கருத்து ஒற்றுமையா ! 'நீதி விசாரணை வேண்டாம்; பொது விசாரணை தேவை' என்கிறார் 'பொது ஜனத்' தலைவர்; மாணவர்கள் கூறியதில் எதை—எந்த நிலையில் ஒபபுக்கொண்டு பேசினார் முதலமைச்சர்' என்று தெரிந்திருந்தும் காட்டிக் கொள்ள விரும்பாமல், மற்றொரு காங்கிரசுத் தலைவர், 'நீதி விசாரணை தேவையில்லையே' என்கிறார் ! இவரோ, சட்டம் படித்தவர்; சில காலம் நீதிக்காக வாதாடும் துறையில் பணியாற்றியவர் !"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது !"

"என்ன அது ?"

"நீதி விசாரணை—பொது விசாரணை இரண்டும் ஒருபுறம் இருக்க, முதலில் விசாரிக்கப்பட வேண்டியது...."

"வேண்டியது....?"

"....முதலில் விசாரிக்கப்பட வேண்டியது, இந்த இரண்டு பேர்களைத்தான் !"

"என்னப்பா—விபரீதமாக ஏதோ பேசுகிறாய் ?"

"விபரீதம் ஒன்றுமில்லை—வேடிக்கைதான் ! வேதனை தான் !"

"என்ன சொல்லுகிறாய், நீ ?"

"இதில் சொல்வதற்கு இனியும் என்ன இருக்கிறது ? இரண்டுபேர் கருத்தும் முதலில் பார்ப்பதற்கு வேறுவேறாகத் தெரிந்தாலும், அடிப்படையில் ஓர் ஒற்றுமை இருக்கிறது என்பதனை, உற்றுக் கவனித்தால் புரிந்துகொள்ளலாம்."

"என்ன அது ?"

"'பொது விசாரணை நடத்தலாமே' என்கிறார் காமராசர் ! 'மாணவர் கூறியதற்குத்தான், 'ஆமாம்' என்று ஒப்புக்கொண்டு விட்டீர்களே—அப்புறம் விசாரணை எதற்கு ?' என்கிறார் பக்தவத்சலம்...."

"....ஆக இரண்டு பேருமே, 'நீதி விசாரணை வேண்டாம்' என்பதில் அடிப்படை ஒற்றுமை கொண்டிருக்கிறார்கள்—இதுதானே உனது முடிவு ?"

"ஆமாம்."

"'நீதி விசாரணை' என்றதும், இந்த இரண்டுபேர் மட்டுமே ஏன் இப்படிப் பேசவேண்டும் ?"

"அதைத்தான் நான் முதலிலேயே கூறினேன்; 'முதலில் விசாரிக்கப்பட வேண்டியவர்கள் இந்த இருவரும்தான்' என்று !"

"அப்புறமும் புதிராகவே பேசுகிறாயே ! கொஞ்சம் புரியும் படித்தான் சொல்லேன்... உன்னைத்தானே... போய்விட்டாயா அதற்குள்..."

—எஸ். ஆர்.

மூன்று மொழிகளில் பண விடைத் தாள்கள்

மாநில அரசுகள் எதிர்ப்புக்குப்பின் மத்திய அரசு பணிகிறது

மூன்று காசு கட்டணத்தை ஐந்து காசுகளாக உயர்த்த யோசனையாம்

புதுடில்லி, ஏப். 2—

ஆங்கிலம்—இந்தி—வட்டார மொழிகள் ஆகிய மூன்று மொழிகளிலும் பண விடைத் தாள்களை அச்சிடும் திட்டமொன்றைச் செயல்படுத்த இந்தியத் தபால்—தந்தி துறை முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

'ஆங்கிலத்திலும், இந்தியிலும் மட்டுமே பண விடைத் தாள்களை அச்சிடுவது' என்றுதான் ஏற்கனவே அரசு முடிவு செய்திருந்தது.

ஆனால், பல மாநில அரசுகளும் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததனால், இது கைவிடப்பட்டு, மூன்று மொழிகளிலும் அச்சிடுவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இம்மாத இறுதி வாரத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் படவிருக்கும் நிதி மசோதாவில், தற்பொழுது பண விடைத் தாள்களுக்கு வசூலிக்கப்படும் மூன்று காசு கட்டணத்தை ஐந்து காசாக உயர்த்துவது என்ற ஒரு யோசனையும் இருக்கிறதாம். இத்தொகை, பணம் அனுப்புவதற்கு வாங்கப்படும் 'கமிஷன்' தொகையில் ஈடுகட்டக் கூடியதாகும்.

இந்த இரண்டு திட்டங்களும், நிதி மசோதா நிறைவேறினதற்குப் பிறகு அமுல்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

தென்னகத்தில் பஞ்சாலைகள் நிலை

செ. கந்தப்பன் கேள்வி -- அமைச்சர் தந்த பதில்

புதுடில்லி, ஏப். 2—

"தென்னகத்தில் ஏற்பட்டுள்ள பஞ்சாலைகளில் நெருக்கடி நீண்டகாலமாகவே நீடித்து வருகிறது; இந்த நெருக்கடிகளையெல்லாம் அரசாங்கத்தினால் மட்டும் தீர்த்துவிட முடியாது; இந்நெருக்கடிகளுக்கு அரசு எந்த வகையிலும் பொறுப்பல்ல"

என்று மக்களவையில், சமூக உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றிக் கேட்கப்பட்ட கேள்விகட்கு அமைச்சர், மேலும் கூறியிருப்பதாவது :—

"தமிழகத்தில் பெரும் அளவில் ஆலைகள் மூடப்படும் என்ற அச்சமில்லை; 'ஆறு ஆலைகள் மூடப்படலாம்' என்று அரசுக்குத் தகவல் கிடைத்தது; இதில் நான்கு ஆலைகளுக்குத் தமிழக அரசு நிதியுதவி அளித்தது; எஞ்சியுள்ள இரு ஆலைகளின் நிலைமை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

"தமிழகத்தில் துணை ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைத் தீர்ப்பதற்கு இயலக்கூடிய திட்டமொன்றைத் தீட்டி, அது குறித்துச் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விவாதிக்க மத்திய அரசு உத்தேசித்திருக்கிறது."

தென்காசித் தொகுதி இடைத் தேர்தல்

கோவில்பட்டி, ஏப் 2—

தமிழகச் சட்டமன்றத்துக்கான தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் நடைபெறும் நாள்பற்றி, நெல்லை மாவட்ட கலெக்டர் எம். எம். இராசேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது :—

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் ஜுன் 8.

வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை : ஜுன் 10.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் : ஜுன் 12.

வாக்குப் பதிவு நாள் : ஜுலை 8.

அரசியலுக்குப் பாடமாகிறார் முன்னாள் அதிபர் சுகர்னோ !

கண் அசைவில் கட்டளையிட்டவருக்கு பல் வலிக்கு மருத்துவம் பார்க்க அனுமதி மறுப்பு !

ஜாகர்தா நகருக்குச் சென்று தனது பல் வலிக்கு மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற இந்தோனேஷியா முன்னாள் அதிபர் சுகர்னோவின் கோரிக்கையை இந்தோனேஷிய இராணுவம் மறுத்துவிட்டிருக்கிறது !

பதவி களையப்பட்ட சுகர்னோ, தற்போது, தலைநகரான ஜாகர்தாவுக்கு வெளியே 40 கல் தொலைவிலுள்ள 'போகர்' என்னுமிடத்தில் சாதாரணக் குடிமகனாக வாழ்ந்து வருகிறார் !

ஏப். 22-ல் நீதி விசாரணை

பொதுமக்களுக்கு நீதிபதி அழைப்பு

சென்னை, ஏப் 2—

கடந்த மார்ச் திங்கள் 25, 26-ம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை, ஏப்ரல் 22-ம் நாளன்று துவங்கவிருக்கிறது.

இச் சம்பவங்கள் தொடர்பாக சாட்சியம் சொல்ல விரும்பும் பொதுமக்கள், ஏப்ரல் 15-ந் தேதிக்குள் தங்களுடைய பெயர் முகவரி—தொழில்—தகுதி முதலிய விவரங்களை சென்னை மலைச் சாலையிலுள்ள சட்ட மன்ற பழைய விடுதி, 2-எண்ணுள்ள அறையில் அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்ற அலுவலகத்திற்கு அனுப்பிவிடவேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விசாரணை, காலை 11-மணி முதல் மாலை 5-மணி வரையில் நடைபெறும்.

இவ்விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதி திரு. பி. சோமசுந்தரம் அவர்கள் நேற்றும் இன்றும் கலவரம் நடந்த பகுதிகளைப் பார்வையிட்டதாகத் தெரிகிறது.

அண்மையில் சென்னை நகரில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து நீதி விசாரணை

சாட்சியமளிக்க முன்வருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

தமிழக அரசு பஸ் போக்குவரத்துத் துறையின் சில ஊழியர்களுக்கும்—மாணவர்களுக்குமிடையே சென்னை நகரில் சில பகுதிகளில் 1968 மார்ச் 25, 26-ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரிக்க, தமிழக அரசினர், 1952-ஆம் ஆண்டின் விசாரணைக் கமிஷன் சட்டம் 3-வது பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி என்னை 28—3—1968-ம் தேதியிட்ட பொதுத்துறை (பொது) அரசினர் நிலை ஆணை எண் 738-ல் கண்டவாறு விசாரணைக் கமிஷனாக நியமித்திருக்கிறார்கள்.

இந்த விசாரணை, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், அவைகள் நடப்பதற்கு ஏதுவான காரணங்கள், சூழ்நிலைகள் பற்றியும் விசாரிக்கும் பகிரங்க விசாரணையாக நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் பற்றி நேரடியாகத் தெரிந்திருந்து, சாட்சியமளிக்க விரும்புவோர் அனைவரும் சாட்சியமளிக்க முன்வரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சாட்சியமளிக்க விரும்புபவர்கள், கீழ்க்காணும் விவரங்களை, 'பழைய சட்ட மன்ற உறுப்பினர் விடுதி, எண் 2, அரசாங்க மாளிகைத் தோட்டம், சென்னை-2' என்ற முகவரியில் உள்ள எனது அலுவலகத்துக்கு, 15—4—68-ஆம் தேதிக்குள் எழுத்துமூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பெயர்
2. முகவரி
3. தொழில் அல்லது பதவி
4. எந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய சாட்சியம் என்ற விவரம்.

விசாரணை 1968 ஏப்ரல் 22-ஆம் நாள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் தொடங்கி, முடியும் வரை தொடர்ந்து நடைபெறும்.

இக்கமிஷன் முன்பு உண்மையான சாட்சியமளிப்பவர்களுக்கு சிவில், கிரிமினல் நடவடிக்கைகளிலிருந்து மேலே குறிப்பிட்ட சட்டத்தின் 6-வது பிரிவில் கண்டுள்ளபடி பாதுகாப்பு அளிக்கப்படும்.

இடம் : சென்னை
நாள் : 2—4—1968

(ஒப்பம்) பி. எஸ். சோமசுந்தரம்
விசாரணைக் கமிஷன் நீதிபதி

மத்திய அரசில் சரிந்து வருகிறது ஆளுங்கட்சி

நாடுமுழுவதிலும் காங்கிரசுக்குக் கிடைத்துள்ள அடி

அரசியல் சட்டத் திருத்தம் இனி நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று!

புதுடில்லி, எப். 3—

இதுவரையில் மத்திய அரசு, நினைத்தபோதெல்லாம் அரசியல் சட்டத்தைத் திருத்திவந்ததுபோல் இனித் திருத்த முடியாது. அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமானால், நாடாளுமன்ற உறுப்பினர் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினரின் ஆதரவு கிடைக்கவேண்டும்; அந்த ஆதரவை மத்திய அரசின் ஆளுங் கட்சியான காங்கிரசு, இப்போது இழந்துவிட்டது.

இரண்டாண்டுக்கு ஒருமுறை நடக்கும் நாடாளுமன்ற மேலவையின் மூன்றில் ஒரு பகுதி இடங்களுக்கான தேர்தல் அண்மையில் நடந்து முடிந்ததையொட்டி, காங்கிரசுக் கட்சியின் பலம் கணிசமாகக் குறைந்துவிட்டிருக்கிறது.

நாடாளுமன்ற மேலவை உருவாக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டு முதலே காங்கிரசுக் கட்சிக்கு, அந்த அவையில் மூன்றில் இரண்டு பங்கு பலம் இருந்து வந்தது.

1960–ம் ஆண்டில் நடந்த தேர்தலுக்குப்பின், எந்த நேரத்திலும், காங்கிரசுக்கு 186 இடங்கள் இருந்துவந்தன.

பின்னர் ஒவ்வொரு இரண்டாண்டுக்குப் பிறகும், எண்ணிக்கை குறைய ஆரம்பித்து, 1966–ல் நடந்த தேர்தலில் 170ஆகக் குறைந்தது; அது, பின்னர் 165ஆகக் குறைந்து, 1968–ல் 142 ஆகிவிட்டது.

எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி, அரசியல் சட்டத்தில் எவ்விதத் திருத்தமும் செய்யமுடியாத நிலை இப்போதுதான் முதன் முதலாகக் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தின் 249, 312 ஆகிய பிரிவுகளின்படி, நாடாளுமன்ற மேலவை, 'மாநிலங்களின் பிரதிநிதித்துவ அவை' என்ற முறையில் வந்திருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆதரவுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ளச் சிறப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்விதம் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அரசியல் சட்ட 249–வது பிரிவின்படி நாட்டு நலனை முன்னிட்டு, மாநிலங்களின் பட்டியலில் உள்ள எந்த ஒரு விவகாரத்தின் தொடர்பாகவும், நாடாளுமன்றம் சட்டமியற்றிக்கொள்ளலாம். அந்தத் தீர்மானம், ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குத்தான் நடைமுறையில் இருக்கும்.

1952 சூலையில் நாடாளுமன்ற மேலவை, இந்தச் சட்டப் பிரிவின்கீழ் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது; மாநிலங்களின் பொறுப்பில் இருக்கக்கூடிய பொருள்கள் விற்பனை—உற்பத்தி—வினியோகம் ஆகியவை தொடர்பாகச் சட்டமியற்ற அந்தத் தீர்மானம் வழி செய்தது. அந்தச் சட்டம் ஓராண்டு மட்டுமே நடைமுறையில் இருந்தது.

கல்வி, வனத்துறை உள்பட அனைத்திந்திய சர்வீசுகளை உருவாக்கக்கூடிய தீர்மானம் ஒன்றை அரசியல் சட்ட 312-வது பிரிவின்கீழ் மூன்றில் இரு பங்கு ஆதரவுடன் நாடாளுமன்ற மேலவை நிறைவேற்றியது. இத்தகைய தீர்மானங்களின்மூலம், அனைத்திந்திய சர்வீசு சட்டம் வந்தது.

நியமன உறுப்பினர் 12 பேர் உள்ளிட்ட 240 பேர்களடங்கிய இந்த மேலவையில், 1960-ல் 144 அதிக இடங்களைப் பெற்றிருந்த காங்கிரசு, இப்போது 64 அதிகப்படியான இடங்களையே பெற்றிருக்கிறது.

522 பேர்களை உள்ளடக்கிய மக்களவையிலும், காங்கிரசு பெற்றுள்ள அதிகப்படியான இடம் 48 ஆகச் சுருங்கிவிட்டதை, இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

1970-ல் நடைபெறவிருக்குல் நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில் காங்கிரசு மேலும் 20 இடங்களை இழக்கும்!

மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 228 இடங்களில், 76 இடங்களுக்கான தேர்தல் முடிவுற்றது. மேற்கு வங்கத்திலும், அரியானாவிலும் சட்டமன்றம் இயங்காததால் அங்கு தேர்தல் நடக்கவில்லை; இந்த இரண்டு மாநிலங்களிலிருந்தும், 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; இரண்டு இடங்களுக்கான இடைத் தேர்தலும் நடக்க வேண்டியுள்ளது.

மேற்சொன்ன இரண்டு மாநிலங்கள் தவிர்த்த ஏனைய மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 68 இடங்களில் 34 இடங்களையே காங்கிரசு பெற்றது; எஞ்சிய 34 இடங்களை எதிர்க் கட்சிகள் கைப்பற்றியுள்ளன. காங்கிரசுக்கும்—எதிர்க் கட்சிகளுக்கும் சரிசமமாகக் கிடைத்துள்ள இந்தத் தேர்தல் முடிவின் மூலம் எதிர்க் கட்சிகளின் பலம் 63-லிருந்து 78 ஆக உயர்ந்துள்ளது.

நாடாளுமன்ற மேலவையில் கட்சிகள் பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கை வருமாறு:—காங்கிரசு 142; சுதந்தரா 15; ஜன சங்கம் 11; ச. சோ. கட்சி 9; வலது கம்யூனிஸ்டு 8; பி.சோ. கட்சி 4; தி.மு.க. 3; முஸ்லிம் லீக் 3; அகாலி தளம் 3; குடியரசுக் கட்சி, லோக் சேவக் தளம், பாரதீய கிரந்தி தளம் ஆகியவை தலா 2; பார்வார்டு பிளாக், பு.சோ. கட்சி, சோஷித் தளம், சம்பூர்ண மகாராஷ்டிர சமிதி, ஜன காங்கிரசு ஆகியவை தலா 1; சுயேச்சைகள் 7; காலியாக உள்ள இடங்கள் (இரண்டு மாநிலங்கள்) 8; மொத்தம் 228; நியமன உறுப்பினர்கள் 12 பேர்.

முன்பு ஆறு இடங்களே பெற்றிருந்த ச.சோ. கட்சி இப்போது 9 இடங்களைப் பெற்று ஜனசங்கத்துக்கு அடுத்தபடியாக வந்துள்ளது. தி.மு.க., வலது கம்யூனிஸ்டு, முஸ்லிம் லீக் ஆகியவை தலா ஒரு இடத்தை அதிகமாகப் பெற்றுள்ளன; பி.சோ. கட்சி இரண்டு இடங்களை இழந்திருக்கிறது; இடது கம்யூனிஸ்டுக் கட்சி, ஏற்கனவே இருந்த இடத்தைக் காப்பாற்றிக் கொண்டது; மேற்கு வங்கத்தில் இடைத்தேர்தல் நடந்தபின், அந்தக் கட்சிக்குக் கூடுதல் இடம் கிடைக்கும் என்று அது நம்புகிறது.

பாரதீய கிரந்தித் தளம், லோக் சேவக் தளம், சோஷித் தளம் ஆகியவை இப்போதுதான் முதன் முதலாக இந்த அவையில் இடம் பெற்றுள்ளன.

குடியரசுத் தலைவர், விரைவில் 5 பேர்களை நியமிப்பார். (நியமன உறுப்பினர் 12 பேர்களில் 4 பேர் பதவிக்காலம் இவ்வாண்டு முடிந்துவிட்டது; டாக்டர் டி. ஆர். காட்கில் இராஜிநாமாவால் ஓர் இடம் காலியாயிற்று.)

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 73 பேர்களும் ஏப்ரல் 29–ம் நாள், மேலவை கூடும்போது பதவி உறுதி எடுத்துக் கொள்வர்.

துப்பறியும் நாய்களின் பணி

சென்னை, ஏப். 1—

போலீசு இலாகாவில் 14 துப்பறியும் நாய்கள் இருக்கின்றன; இவைகளின் பராமரிப்புக்காக 1966—67-ம் நிதியாண்டில் ரூ. 19,276.71 செலவு செய்யப்பட்டுள்ளது.

"1966—67-ம் ஆண்டில் இந்தத் துப்பறியும் நாய்கள் 50 திருட்டு வழக்குகளிலும், 37 கொலைகளிலும் துப்புத் துலக்கின"

என்ற தகவலை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

என். ஆர். தியாகராசன்:—"ஒரு திருமண வீட்டில் நடந்த களவுக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காகத் துப்பறியும் நாய் கொண்டுவரப்பட்டது. அந்தத் திருமண வீட்டிற்குக் காலையில் வந்திருந்த அனைவரையுமே அந்த நாய் கவ்விப் பிடித்தது; இத்தகைய விபரீதங்கள் நிகழா வண்ணம் அவைகளைத் திருத்திப் பயிற்சி கொடுக்கப்படுமா?"

அண்ணா:—"மனிதர்களைத் திருத்துவதிலேயே வெற்றி பெற முடியவில்லையே! நாய்களைத் திருத்திவிடுவது என்பது இயலாத காரியம்."

(4-ம் பக்கம் பார்க்க)

சிந்துவெளித் தமிழ் நாகரிகத்திலேயே செங்கல் சிறப்பிடம் பெற்றிருந்தது

பூம்புகாரில் அகழ்ந்தெடுத்த செங்கல் மிகப் பெரியதாகும்

குறைந்த செலவில் நிறைந்த பலன் தரும் கற்களை உற்பத்தி செய்ய முனையவேண்டும்

திருமழிசை நவீன செங்கல் தொழிற்சாலைத் திறப்புவிழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உரை

சென்னை, ஏப். 2—

"பொறிகள்—இயந்திரச் சாதனங்கள் அமைத்து இந்தத்தொழிற்சாலையை ஆரம்பிக்க ரூ. 40 இலட்சம் அளவுக்குத் திட்டமிடப்பட்டு—ரூபாய் மதிப்புக் குறைப்பின் காரணமாகவும் பிற காரணங்களினாலும் ரூ. 70 இலட்சத்துக்கு உயர்ந்து விட்டது.

"இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏராளமாக உருவாக வேண்டிய நிலை இருக்கிறது; நம்முடைய தேவைகளை நிறைவேற்றக் கூடியவகையில் இதுபோன்ற தொழிற்சாலைகள் பயன்படும்.

"மண்ணை அறுத்து—அதைச் சுட்டு—தேவையை நிறைவு செய்து கொள்ளுமளவுக்கு நாகரிகம் மேம்பாடடைந்தது; முதலாவதாக, உண்ண உணவு பெற வேளாண்மைத் தொழிலை மேற்கொண்ட மனிதன், மானத்தைக் காப்பற்றிக் கொள்ளும் விதத்தில் உடை தயாரித்துக் கொள்ள நெசவுத் தொழிலை மேற்கொண்டான்; அதற்கும் அடுத்து 'இருக்க இடம் தேவை' என்ற அடிப்படையில் வீடு கட்டினான்; இப்படி மனிதன் நாகரீக வளர்ச்சி பெற்றான்!

"மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சியின் மூலம் பண்டைய மக்கள், செங்கற்களின் முக்கியத்துவத்தை—இன்றியமையாத்தன்மையை உணர்ந்திருந்ததை—அவற்றைப் பயன்படுத்தியதை நாம் அறிகிறோம்.

"காவிரிப்பூம்பட்டினத்தில் கரிகால சோழன் ஆட்சிக் காலத்தில் பூம்புகார் துறைமுகம் கட்டப்பட்ட இடத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் கண்டெடுக்கப்பட்டு, உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கையொட்டி நடந்த கண்காட்சியில்கூட கண்டோம்!

"இங்கே இப்போது 9 அங்குல நீளமும் நாலரை அங்குல அகலமும் 3 அங்குள கனமும் உள்ள செங்கற்கள் தயாராகின்றன; ஆனால் பூம்புகார் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த செங்கற்கள் 24 அங்குல நீளமும் 18 அங்குல அகலமும் 6 அங்குல கனமும் உள்ளதாக இருந்தன.

"செலவையும் குறைத்து—உறுதியையும் மிகப்படுத்தி—வகைகளையும் அதிகரித்து—மற்ற நாடுகளைப்போல் புதிது புதிதாகக் கண்டுபிடித்து உற்பத்தி செய்தால், ஏற்றமிகு நிலையை நாம் அடையலாம்.

"இங்கே ஏற்றி வைக்கப்படும் தீ, பல நூற்றுண்டுக் காலத்திற்கு அணையாமல் இருக்க வேண்டுமென வாழ்த்தி, தொழிற்சாலையைத் துவக்கி வைக்கிறேன்"

இவ்வாறு, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருமழிசையில், அரசினர் செங்கல் தொழிற்சாலையைத் துவக்கிவைததுப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

'யூகோஸ்லாவியா நாட்டின் ஒத்துழைப்புடன் இங்கே இந்தத் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

'மண்ணைப் பொன்னாக்குவது' என்பதுபோல், இங்கே மண்ணைச் செங்கற்களாக மாற்றி, அதை, செம்பொன்னாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்!

ரூ. 75-இலட்சம் செலவில் இந்தத் தொழிற்சாலை உருவாகிகப்பட்டிருக்கிறது. இங்கே உற்பத்தி செய்யப்படும் செங்கற்கள் மற்றதைவிட அழுத்தமுள்ளதாகவும், உறுதியும் அழகும் அருமையுள்ளதாகவும், ஒரே சீரான வடிவமுள்ளதாகவும், ஏற்றத்தாழ்வற்றதாக நெருக்கமுள்ளதாகவும், வளைவு நெளிவற்றதாகவும், சிமெண்டு தடவி புற அழகை உண்டாக்கவேண்டிய அவசியமில்லாத வகையிலும் உருவாக்கப்படுகிறது.

இதில் துளைபோட்ட செங்கற்களும், துளை போடாதவைகளும், குறைந்த விலை உள்ளவைகளாக உற்பத்தி செய்வதில் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நாளொன்றுக்கு 66 ஆயிரம் செங்கற்களை உற்பத்தி செய்யத்தக்க விதத்தில் பொறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களின் ஒத்துழைப்பும், அதிகாரிகளின் கவனிப்பும் பொது மக்களின் ஆர்வமும் கிடைக்குமானால், 80 ஆயிரம் செங்கற்களை உற்பத்தியாக்கும் அளவுக்கு எட்டிப் பிடிக்கலாம் என்ற உறுதி இருக்கிறது.

ஒரு சதுர சென்டிமீட்டர் பரப்பளவுள்ள செங்கல் சாதாரணமாக 140 கிலோ அழுத்த சக்தியுள்ளதாகத்தான் இருக்கும்; ஆனால், இங்கே உற்பத்தியாகக் கூடியவை 193 கிலோ அழுத்த சக்தியுள்ளதாக இருக்கும; மற்றவை அழகாகவும், அழுத்தமுள்ளதாகவும் இருக்கும்.

சென்னைக்கு அருகில் இந்தத் தொழிற்சாலை அமைந்திருப்பதும், தொழிற்சாலைக்குப் பக்கத்திலேயே தேவையான களிமண் கிடைப்பதும், செங்கல் உற்பத்திக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பாகும்.

சில இடங்களில் தொழிற்சாலை அமைந்தால் போக்குவரத்து இடர்ப்பாடு ஏற்படும்; அப்படிப்பட்ட நிலை இதற்கில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

சோழர்--பாண்டியர் காலத்திலேயே சீரணி இருந்தது

'செங்காவலர் படை' என்ற கூற்றுக்குப் பதில்

திருச்சி மாவட்டச் சீரணித் தலைவர் அன்பில் தர்மலிங்கம் உரை

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆட்டாங்குடி, கொத்தக்கோட்டை, வாராப்பூர் ஆகிய கிராமங்களில் 26-3-68-ல் புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் யு. சூசைநாதன் பி.ஏ. தலைமையில், திருச்சி மாவட்ட சீரணித் தலைவர் திரு. அன்பில் தர்மலிங்கம், சீரணிப் பணியைத் துவக்கிவைத்தார்.

காலை 9-மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை கிராமங்களுக்குச் சென்று பணியைத் துவக்கிவைத்தார் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. பராங்குசமும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

ஆட்டாங்குடி

ஆட்டாங்குடி கிராம பெருமாள் குளத்தை ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. சீரணி உறுப்பினர்களும் கிராம மக்களுமாக சுமார் 300 பேர் வேலையில் ஈடுபட்டனர்.

அன்பில் தர்மலிங்கம், திரு. யு சூசைநாதன் ஆகியோருக்கு கவிநாடு கீழவட்டம் ஊராட்சிமன்றத் தலைவர் அருங்குளலிங்கம் வரவேற்பிதழ் வாசித்தளித்தார். பெண்கள் ஆரத்தி எடுத்து மாவட்ட சீரணித் தலைவரையும் கோட்டாட்சித் தலைவரையும் வரவேற்றனர். மாவட்ட சீரணித் தலைவர், சீரணி நாட்டிற்கோர் சீரிய அணி; கட்சி வேறுபாடின்றி அனைவரும் பங்கு கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு சீரணிப் பணியைத் துவக்கிவைத்தார். திரு. ஜி. பராங்குசம் அவர்களும் சொற்பொழிவாற்றினர். வேலையின் மதிப்பு ரூ. 500.

கொத்தக்கோட்டை

கொத்தக்கோட்டை கிராம பிரகதாம்பாள் சமுத்திரம் வரத்து வாரியைச் சீர்படுத்தும் சீரணிப் பணிக்கு புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் யு. சூசைநாதன் தலைமை வகித்தார். திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய சீரணித் தலைவர் திரு. அ. பெரியண்ணன் புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவருக்கும் திருச்சி மாவட்ட சீரணித் தலைவர் அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கும் வரவேற்பிதழ் வாசித்தளித்தார். திரு ஜி. பராங்குசம் சீரணியின் நோக்கத்தைப் பற்றி எடுத்துரைத்தார்.

பின்னர் பேசிய திருமதி பிருந்தாதேவி அம்மையார் சீரணி என்பது சோழர் காலத்திலேயே இருந்து வந்தது என்றும், வீட்டிற்கு ஒருவர் முன்வந்து செயலில் ஈடுபட்டனர் என்றும், சீரணி ஓர் நல்ல அணியென்றும், நாட்டிற்கு நற்பயன் அளிக்கும் என்றும் பேசினார்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம், சீரணி சோழர் காலத்தில் மட்டுமல்ல—பாண்டியர் காலத்திலும் இருந்துவந்ததென்றும், சோமசுந்தரக் கடவுளே சீரணிப் பணியில் ஈடுபட்டிருக்கிறாரென்றும், இந்த அணியைச் செங்காவல் படையென ஏசுவது தவறான கருத்தாகுமென்றும், சீரணி செம்மையான பணியில் ஈடுபடும் என்றும், 'கூட்டாஞ்சோறு சாப்பிடுவோம்' என்று இளஞ் சிறார்கள் கூறுவது போல அனைவரும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு நல்ல பணியென்றும் கூறி, சீரணிப் பணியைத் துவக்கிவைத்தார். வேலையின் மதிப்பு ரூ. 1,000.

திருவரங்குளம் ஆணையர் திரு பெ. வேலாயுதம் நன்றி கூறினர்.

வாராப்பூர்

வாராப்பூர் கிராம விரியனிக் குளத்தை ஆழப்படுத்தும் சீரணிப் பணியை திரு. யு. சூசைநாதன் தலைமையில் திரு. அன்பில் தர்மலிங்கம் துவக்கிவைத்தார். சீரணிப் பணியில் சுமார் 250 பேர் பங்கு கொண்டனர். விழாவில் பங்கு கொண்ட திருமதி பிருந்தாதேவி அவர்கள், வாராப்பூர் என்றால், இங்கு பிணி வாரா என்றும், பசி வாரா என்றும், தொல்லைகள் வாரா என்றும், திருக்குறள் அனைவருக்கும் உரித்தான ஒரு நூல் என்றும், வாராப்பூர் கிராமத்தில் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் நினைத்தால் உடனடியாக மகப்பேறு நிலையம் ஒன்றை ஆரம்பிக்க முடியுமென்றும் கூறினர்.

திரு. அன்பில் தர்மலிங்கம், புதுக்கோட்டைப் பகுதிக்கு ரூ. 96 இலட்சம் கடன் வசதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், விரைவில் இக்கிராமத்தில் மகப்பேறு நிலையம் துவக்க ஏற்பாடுகள் செய்வதாகவும் கூறி, சீரணிப் பணியைத் துவக்கிவைத்தார். வேலையின் மதிப்பு ரூ. 500.

கூழையக்காடு

வெண்ணவல்குடி ஊராட்சிமன்றத்திலுள்ள கூழையக்காடு கிராமத்தில் 27-3-68-ம் நாளன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய சீரணித் தலைவர் திரு. அ. பெரியண்ணன் தலைமையில் பாதரக் குளத்தை ஆழப்படுத்தும் சீரணிப் பணியைத் திருவரங்குளம் ஆணையர் திரு. பி. வேலாயுதம் துவக்கிவைத்தார்; விவசாயிகளுக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உறவுகளைப்பற்றி எடுத்துக் கூறினர்.

ஆணையர் அவர்களுக்குக் கிராம மக்களின் சார்பிலும். ஆசிரியர்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

சீரணிப் பணியில் சுமார் 250 நபர்கள் கலந்துகொண்டனர். பணி துவக்குமுன்னர் பலத்த இடி இடித்தது; மழை பெய்தது; எனினும், சீரணியினர் முழு வேகத்துடன் பணியில் ஈடுபட்டனர்.

வெண்ணவல்குடி ஊராட்சிமன்றத் தலைவர் திரு. மணிமொழி, ஆசிரியர் சுந்தரராசன், புதுக்கோட்டை கோட்ட இணை பஞ்சாயத்து அதிகாரி திரு ப. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருவரங்குளத்தில் டிராக்டர் வழங்கு விழா

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் 27—3—68 அன்று டிராக்டர் வழங்கும் விழா நடைபெற்றது.

திருச்சி ஏ. பி. சி. நிறுவன உரிமையாளர் சின்னப்பன், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ 30,000 மதிப்புள்ள புதிய டிராக்டரை திருச்சி மாவட்ட கலெக்டரின் தனி உதவியாளர் எஸ். பெருமாள் பி.எஸ்சி. அவர்களிடம் வழங்கினர். அவர் அதை திருவரங்குளம் ஆணையர் பி. வேலாயுதம் அவர்களிடம் முறைப்படி வழங்கினர்.

புதுக்கோட்டை கோட்டாட்சித் தலைவர் யு. சூசைநாதன் பி.ஏ., மாவட்ட வேளாண்மை அலுவலர் இராம. ஜெபராஜ பி.எஸ்சி. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர் பி. வேலாயுதம் டிராக்டரைப் பெற்றபோது மழை பெய்தது; 'விவசாயிகளின் தோழன், நல்ல நேரத்தில் கிடைக்கப்பெற்றது' என்று விவசாயிகள் கூறினர். அலுவலகத்தின் அருகே உள்ள நிலத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் சீரணிப் பணி

11—3—68 அன்று சீரணிக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பிய ஆணையின்படி, 17—3—68 காலை 11-மணியளவில், சீரணிக் குழுத் தலைவர் திரு. செல்வராஜ் தலைமையில், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் சீரணிக் குழுக் கூட்டம் நடைபெற்றது; சீரணியின் பணிகளைப் பற்றி ஆணையாளர் விரிவாக எடுத்துக் கூறினர்.

அக்கூட்டத்தில், ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமை அன்று வருகை தரும் சீரணித் தொண்டர்களைக் கொண்டு மேற்கொண்டு பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

17—3—68-ல் நடைபெற்ற கூட்டத்தில், மரக்காணம் பேரூராட்சிக்கு உட்பட்ட புளியங்குளம் குடிநீர்க் குளத்தை ஆழப்படுத்துவதென்றும், மரக்காணம் பேரூராட்சிக்கு உட்பட்ட கைப்பாணிகுப்பம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகுக் கூரை அமைத்துக் கொடுக்கவும், கட்டிடத்திற்கு வேண்டிய பொருள்களைக் கிராமவாசிகளே தரவேண்டியது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அடசல் கிராம ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியைக் கட்டித் தரத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க ஒதுக்கீடான ரூ 1,500-ல், பணிக்கு வேண்டிய துணைக் கருவிகள் வாங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அடசல் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக் கட்டிடம், கிராம மக்கள் இனமாகக் கொடுக்கும் பொருள்கள் போக, தேவைப்படும் பொருள்கள் வாங்கி வேலையை ஏப்ரல் திங்களில் தொடங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்களின் சமூகப் பணி

27—3—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எல்லைப்பட்டி கிராமத்தில் புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மாணவர்கள் சுமார் 100 பேர் சமூகப் பணியாற்றினர்.

ஒரு பர்லாங்கு நீளமுள்ள சாலையையும் பள்ளித் தோட்டம் அமைப்பதற்கு முன்னேற்பாடுகளும் செய்தனர்.

மாலை வேளையில் மாணவர்கள், பேராசிரியர்கள் அனைவரும் குளக்கரையில் ஒன்றுகூடினர்.

சமூக சேவை விழாவிற்குக் கல்லூரிப் பேராசிரியர் திரு. கந்தசாமி தலைமைவகிக்க, பேராசிரியர் இராதாகிருஷ்ணன், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியச் சீரணித் தலைவர் திரு. அ. பெரியண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேல்ாயுதம் சிறு சேமிப்பின் அவசியத்தை எடுத்துக் கூறி, சிறு சேமிப்பு உண்டியல்களைக் கிராம மக்களுக்கு வழங்கினர்.

கம்பத்துப்பட்டியில் சீரணியினர் பணி

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூரை அடுத்த கம்பத்துப்பட்டியில் ஊராட்சி ஒன்றிப்பு சீரணித் தொண்டர்களால் நான்கு பர்லாங் நீளமுள்ள சாலை போடப்பட்டது.

இவ்விழாவிற்கு ஒன்றிப்புத் தலைவர் நா. கிருட்டினசாமி தலைமை வகித்தார்.

மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் பி. தர்மராசு, விழாவைத் துவக்கிவைத்தார்.

சீரணித் தொண்டர்கள் சார்பில் எஸ். டி. கொழுந்து மாலை அணிவித்தார்.

ஆணையாளர் அ. ஆளவந்தார் அனைவரையும் வரவேற்று நன்றி கூறினர்.

மக்களாட்சி மலர்ந்த மார்ச் 6!

தமிழகமெங்கும் நடந்த விழா நிகழ்ச்சிகள்

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டு, மக்களாட்சி மலர்ந்து ஓராண்டு நிறைவெய்தியதைக் கொண்டாடும் வகையில், கடந்த மார்ச் 6-ம் நாள் முதல் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி சுருக்கமாக இங்கு தரப்படுகிறது :—

தேவாரம் நகர்

தேவாரம் நகர் தி.மு.க. சார்பில், மார்ச் 6-ல் விழாவினையொட்டி வ. உ. சி. திடலிலிருந்து திரு. கோ. கந்தசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில், சிற்றூர்—பேரூர் கிளைக் கழகத் தோழர்கள் கழகக் கொடிகளுடனும், வாத்திய இசைகளுடனும் கலந்துகொண்டனர்; தோழர் பெரியசாமியின் புலிவேட விளையாட்டும், பெரிய கருப்பன் குழுவினரின் சிலம்ப விளையாட்டும் நடைபெற்றது.

பின், தோழர் ச. முத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் நெடுமாறன், எம். இரத்தினம், ஆ. பழனியாண்டி, நா. நடராசன், கொ. இராசகோபால், அப்துல் கரீம், தண்டாயுதபாணி, செயராம் ஆகியோர் பேசினர். தோழர் நா. நடராசன் நன்றி கூறினர்.

மதுரை--செல்லூர்

மதுரை நகர் செல்லூர் 1-வது வார்டு அய்யனார் கோவில் முக்கிய வீதியிலுள்ள எம். ஜி. ஆர். படிப்பகத்தின் சார்பில் மார்ச் 6-ல் விழா கொண்டாடப்பட்டது. புதுக் கொடிகள் ஏற்றி, சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கரிவலம்வந்தநல்லூர்

தி. மு. க. சார்பில், மார்ச் 6-ம் நாள் மாலை 4-மணியளவில் எம். ஜி. ஆர். படிப்பகத்திலிருந்து ஆ. பாலு தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது; கழகத் தோழர்களும், பிரமுகர்கள் பலரும் அணிவகுத்து வந்தனர்.

முக்கிய வீதிகளிலெல்லாம் கொடியேற்றிவைத்து தெருவெங்கும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட சைககிள் இரதத்தில் அண்ணா உருவப் படம் பவனி வந்தது.

சிலம்பக் குழுத் தலைவர் குருசாமி தலைமையில் புலிவேடமும் தெருவெங்கும் சிலம்பக் கலை விளையாட்டும் நடைபெற்றது; வாண வேடிக்கைகளும், பாண்டு வாத்தியங்களும் பங்குபெற்றன.

அண்ணா திடலில், சி. பா. சுப்பையா தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள் கா. மாரியப்பன், செ. கதிரேசன், வழக்கறிஞர் கு. சங்கரநாராயணன், வை. காமாட்சி, ப. கதிரேசன், லெ. குமரன், க. இராமசாமி, மு. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஊராட்சிமன்ற உறுப்பினர் கு. கிருட்டினன் நன்றி கூறினர்.

எழுமலை

தி. மு. க. சார்பில் மார்ச் 6-ல் விழா கொண்டாடப்பட்டது. மாணவர் இராசேந்திரன் நினைவு மன்றப் படிப்பகத்தை ஊராட்சி மன்ற உறுப்பினர் தங்கமுத்து திறந்துவைத்துக் கொடியேற்றினர்.

தோழர் இரா. சு. தங்கராசன் தலைமையில் 1000 பேர்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

பொதுக்கூட்டததில் தோழர்கள் நெல்லை மாறன், ஐ. செயராமன் பி.எஸ்சி., ஆனந்த கிருட்டினன் ஆகியோர் பேசினர்.

பொள்ளாச்சி

17 வது வட்ட கண்ணப்பன் மன்றச் சார்பில் மார்ச் 6-ல் விழா நடைபெற்றது; நகர தி. மு. க. செயலாளர் தி. இராமசாமி முன்னிலையில் க. கருப்புசாமி, கழகக் கொடியேற்றினர். முத்தூர் ஊராட்சித் தலைவர் எம். இரத்தினசாமி இனிப்பு வழங்கினர்.

நெல்லிக்குப்பம்

தி.மு.க. சார்பில் விழா கொண்டாடப்பட்டது; காலை 8 மணிமுதல் நகரில் பல இடங்களில் நகரச் செயலாளர் இரா. பாண்டுரங்கன் அவர்களால் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டு, இனிப்புகள் வழங்கப்பட்டன.

கோம்பக்காடு

தி. மு. க. சார்பில், மார்ச் 10-ல் கொடி ஏற்றுவிழாவும், பொதுக் கூட்டமும் தோழர் கே. சுப்பையன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் திராவிடமணி சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. வட்டப் பிரதிநிதி சின்னச்சாமி நன்றி கூறினர்.

கரூர்

கரூர் 5, 6-வது வட்ட தி. மு. க. சார்பில், மார்ச் 10-ல் விழா நடைபெற்றது; தோழர் நாச்சிமுத்து தலைமை தாங்கினர்.

கழக அரசு ஆற்றியுள்ள அரிய சாதனைகளை விளக்கித் தோழர்கள் சி. இராசு, பரமத்தி சண்முகம், கே. ஜி. உமாகாந்தன், ஒளிமாறன், செல்வராசு ஆகியோர் பேசினர்.

சுப்பராயன் புதூர்

தி. மு. க. சார்பில் 28—3—68 காலை 9-மணியளவில், முருகன் திடலில் விழா கொண்டாடப்பட்டது; தோழர் சோ. கு பழனிச்சாமி தலைமை தாங்கினர்; தலைவர் கொடியேற்றிவைத்தார்; தோழர் திரு. சென்னியப்பன் உரையாற்றினர். இனிப்பு வழங்கப்பட்டது. செயலாளர் இரா. கி. வைரப்பன் நன்றி கூறினர்.

சேலம் 18-வது வட்டம்

தி.மு.க. சார்பில், 24—3—68-ல் தமிழக அரசின் ஓராண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; நகர மன்ற உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் தலைமைவகித்தார். கழக அரசின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கித் தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கே. செயராமன் பி.ஏ., எம்.எல்.ஏ., சிற்றுளி சுப்பிரமணியம், சி. பழனியப்பன் எம்.சி., பி. வி. சீனிவாசன் எம்.சி., பி. தண்டபாணி (சுத.), கோவை — சேலம் பட்டதாரித் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் அரங்கநாயகம், ந. சே. சோமசுந்தரம், ஏ. சுப்பிரமணியம், சி. சுப்பிரமணியம், திருச்சி மாவட்ட மாணவத் தலைவர் சி. இராசு ஆகியோர் உரையாற்றினர்.

தி. மு. க. மீது வீண் பழி!

நடுநிலையாளர் மறுப்பு

"நான் தி. மு. கழகத்தினனோ, அதன் ஆதரவாளனோ, அல்லது அனுதாபியோ அல்லன்; இருந்த போதிலும், 'தி. மு. கழகம் பிறமொழிக்காரர்களிடையே வெறுப்பைப் பரப்பி வருகிறது' என்ற குற்றச்சாட்டை என்னால் நம்ப முடியவில்லை!

"தி. மு. கழகம், 'திராவிட நாடு' கேட்டுவந்த நிலையிலிருந்தே, தென்னிந்தியர்களிடையே ஒத்துழைப்பையும், ஒற்றுமையையும் கோரி வந்துள்ளது.

"இங்கு (பெங்களூரில்) கழகம் நடத்தும் பெரும்பாலான கூட்டங்களில், கன்னட மொழியிலும் சொற்பொழிவுகள் நடப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

"கன்னடக்காரர்களும் தமிழர்களும், தங்களிடையே ஒற்றுமையின்மையையோ, வெறுப்பையோ வளர்க்காமலிருப்பதும், பொறுமையை வளர்ப்பதும், இன்றைய மிகப் பெரிய தேவையாகும்"

என்று பெங்களூரைச் சேர்ந்த எம். பிலோமன் ராஜ் என்பவர் ('டெக்கான் ஹெரால்டு' 25-3-68 இதழில்) கருத்தறிவித்திருக்கிறார்.

இரயில்விபத்துக்கள் அதிகரிக்கின்றன

மக்களின் உயிரைப் பாதுகாக்கத் தவறினர் அமைச்சர்

மக்களவையில் கழக உறுப்பினர் விசுவநாதன் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 2—

"அண்மையில் இரயில் விபத்துக்கள் அதிகரித்திருக்கின்றன; ஏதுமறியாத பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்கத் தவறிய இரயில்வேத் துறை அமைச்சர், பதவி விலகவேண்டும்; இரயில்வே போர்டு கலைக்கப்பட வேண்டும்"

இவ்வாறு மக்களவையில், கடந்த மூன்று மாத காலத்தில் தொடர்ந்து ஏற்பட்ட இரயில் விபத்துக்கள் பற்றி மூன்று மணி நேரம் நடைபெற்ற விவாதத்தின்போது, கழக உறுப்பினர் கோ. விசுவநாதனும், மற்றும் உறுப்பினர்களும் வலியுறுத்தினர்; 'ஏற்பட்ட விபத்துக்களுக்கு இரயில்வே அமைச்சர்தான் பொறுப்பேற்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டனர்.

மூடப்பட்ட ஆலை தொழிலாளருக்கு உதவி

அமைச்சர் விளக்கம்

சென்னை, ஏப். 1—

"கோவையில் மூடப்பட்ட ஐந்து நூல் ஆலைகளின் 5,132 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 40 வீதம் உதவிப் பணம் வழங்கப்பட்டது; ஆலைகள் திறக்கும் வரையில் மேலும் மாதாமாதம் தொடர்ந்து உதவி வழங்கும் உத்தேசம் இல்லை"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், மேலவையில் தெரிவித்தார்.

"கோவையில் ஆலைகள் மூடப்பட்டபின் மதுரையில் இராஜா மில், கோதண்டராம் மில் ஆகியவை மூடப்பட்டிருக்கின்றன. இந்த ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்ன உதவி கேட்கிருர்கள் என்பதும், அதற்கு அரசு என்ன முடிவு செய்கிறது என்பதைப் பொறுத்தும் உதவி அமையும்" என்று அமைச்சர் கூறினர்.

சென்ற ஆண்டில் கொலை வழக்குகள்

"1966—67-ம் ஆண்டில் தமிழகத்தில் மொத்தம் 658 கொலை வழக்குகள் தொடரப்பட்டன; இவைகளில் 351 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்.

"திருச்சி மாவட்டத்தில் 62 வழக்குகளும், தஞ்சையில் 44 வழக்குகளும், தென்னுற்காடு மாவட்டத்தில் 30 வழக்குகளும் மதுரை நகரப் பகுதியில் 28 வழக்குகளும், மதுரை வடக்குப் பகுதியில் 34 வழக்குகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 63 வழக்குகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் 68 வழக்குகளும், கோவையில் 111 வழக்குகளும், சேலத்தில் 80 வழக்குகளும், தர்மபுரியில் 34 வழக்குகளும், நீலகிரியில் ஒரு வழக்கும் தொடரப்பட்டன."

இத்தகவலை முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

விடுதலை வீரர்கள் பட்டியல் தொகுப்பு முடிந்தது

"நாட்டு விடுதலைப் போரில் பங்கெடுத்துக்கொண்டவர்களின் விவரமடங்கிய நூல் தொகுப்பு வேலை பெரும்பாலும் முடிந்து அச்சிடுவதற்குத் தயாராக இருக்கிறது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று இந்த நூலைத் தொகுத்துள்ளதாக அண்ணு தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கோ. விசுவநாதன்

கழக உறுப்பினர் கோ. விசுவநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பொதுமக்கள் தற்போது இரயில்களில் பயணம் செய்வதற்கே அஞ்சுகிருர்கள்!

"கடந்த மூன்று மாதங்களாகத் தொடர்ந்து ஏற்பட்ட இரயில் விபத்துக்கள், மக்கள் மனதிலிருந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட்டன!

"இரயில்வே அமைச்சர், 'இரயில்வே போர்டுக்கும்—நாடாளுமன்றத்திற்கும் இடையே இருக்கின்ற இணைப்பு அலுவலரே ஆவார்' என்பது அறிவிக்கப்பட்டு விட்டது!

"இரயில்வே போர்டு உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்; அதன் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்.

"ஏற்பட்ட விபத்துக்களுக்கெல்லாம் இரயில்வே அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும்.

"ஜெனரல் – மானேஜர்களுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்காமல், அவர்களை வேலைக்காரர்கள்போல் இரயில்வே போர்டு நடத்துகிறது!"

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் இரயில்வே போர்டை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டுமென்றும், அமைச்சர் பதவி விலகுவது அவசியமென்றும் வற்புறுத்தினர்.

ஏதோ ஒரு குறை!

திருமதி விஜயலட்சுமி பண்டிட் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மற்ற நாடுகளில் ஏற்பட்ட இரயில் விபத்துக்களைச் சுட்டிக் காட்டுவதால் மட்டும் நாம் மன நிறைவு கொள்ள இயலாது.

"ஏதுமறியாத பாமர மக்கள், இரயிலில் பயணம் செய்யும்போது கொல்லப்பட்டது மிகவும் வருந்துவதற்குரிய ஒன்ருகும்.

"இவைகளை நாம் எண்ணிப் பார்க்கும்போது, ஏதோ ஒரு குறை இரயில்வே போர்டில் நிலவுகிறது என்பதை நம்மால் உணர முடிகிறது!

"இதற்காக நாம் எண்ணற்ற விசாரணைக் குழுக்களை நியமித்துவிடுவதால், பிரச்சினையைத் தீர்த்துவிட இயலாது. நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்கள் கூறும் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டாலன்றி, குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நாம் எய்துவதற்கு இயலாது!"

காந்தியார் தலையுடன் அஞ்சல் தலைகள்--நாணயங்கள்

நூற்றுண்டு விழாவினைச் சிறப்பிப்பதற்கு ஏற்பாடு

புதுடில்லி, ஏப். 3—

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் காந்தியார் நூற்றுண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில், அஞ்சல் தலைகள்—நாணயங்கள்—ரூபாய் நோட்டுகள் புதிதாக வெளியிடப்படும் எனத் தெரிகிறது.

1969-ம் ஆண்டு அக்டோபர் 23-ந் தேதியன்று அஞ்சல் தலைகள், நாணயங்கள், ரூபாய் நோட்டுகள் ஆகியவைகளைக் காந்தியார் தலையுடன் வெளியிடும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கிறது.

கடன் பட்டார் ஏற்ற சிறைவாசம்!

சென்னை, ஏப் 1—

"வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் தமிழகத்தில் 21 பேர் சிறையில் உள்ளனர்; இவர்களில் நெல்லை மாவட்டத்தில் ஒருவரும், கோவையில் ஐவரும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒருவரும், தென்னுற்காடு மாவட்டத்தில் எழுவரும், தஞ்சையில் இருவரும், சேலத்தில் ஒருவரும், மதுரையில் ஒருவரும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருவரும், தர்மபுரி மாவட்டத்தில் ஒருவரும் இருக்கின்றனர்"

என்று, சட்டமன்ற மேலவையில், அமைச்சர் மாதவன் தெரிவித்தார்.

இந்திய இரயில்வே:

இன்றைய விபத்துக்கள் பற்றிய அட்டவணை

1.	வண்டியின் பெயர்	....	கர்ஹாரா செல்லும் துரிதச் சரக்கு வண்டி
	விபத்து	....	தடம் புரண்டது
	காலம்	....	31—3—68 இரவு
	சேதம்	....	இதுவரை தெரியவில்லை
2.	வண்டியின் பெயர்	....	பம்பாய் மெயில்
	விபத்து	....	தடம் புரண்டது
	காலம்	....	1—4—68 இரவு
	சேதம்	....	இதுவரை தெரியவில்லை
3.	வண்டியின் பெயர்	....	சரக்கு வண்டி
	விபத்து	...	தடம் புரண்டது; எனவே தீப்பிடித்துக்கொண்டது
	காலம்	....	2—4—68 காலை
	இடம்	...	கொச்சி -- ஷோரனூருக்கு இடையில்
	சேதம்	....	5 பெட்டிகள், சாமான்கள்

மன்னிக்கவும்:

மூளைவேண்டுமா?

உலகின் முதல் இருதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ள தென்னுப்பிரிக்க டாக்டர் கிறிஸ்டியன் பர்னுர்ட் என்பவர், வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில்,

"மிக விரைவில் ஒருவருடைய மூளையை, வேருெருவருக்குப் பொருத்தும் அறுவைச் சிகிச்சையையும் வெற்றிகரமாக முடிக்கும் நாளை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்"

எனக் குறிப்பிட்டிருக்கிருர்.

இதுபற்றி அவர் மேற்கொண்டு தெரிவிக்கையில்,

"இதுபோல் முக்கிய உறுப்புக்களையெல்லாம் ஒரு மனிதனின் உடலிலிருந்து வேருெரு மனிதனின் உடலுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றிப் புதிய மனிதனையே உருவாக்க முடியும் என நம்புகிறேன்"

எனவும் கூறியிருக்கிருர்.

கேள்வி-பதில்!

"'காலம் மாறும்—சரித்திரம் திரும்பும்' என்றெல்லாம் அவ்வப்போது கூறுகிருர்களே—அதற்கு, இப்போதைய நிகழ்ச்சி ஒன்றை வைத்து உதாரணம் காட்ட முடியுமா?"

"முடியும்; சொல்கிறேன்; சென்ற ஞாயிற்றுக்கிழமை வரையில், 'ஜான்சன்' என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஆத்திரமும் அருவருப்பும் காட்டியவர்கட்கு 'வியட்நாமில் குண்டு வீச்சு கிடையாது; தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை' என்று ஜான்சன் அறிவித்தவுடன், ஆச்சரியத்துக்கும் ஆரவாரத்துக்கும் அவர் உரியவராகிவிட்டாரே! சரிந்துவந்த அவரது புகழ், இப்போது, அங்கே எப்படி கொடிகட்டிப் பறக்கிறது தெரியுமா? அரசியலில்—பொது வாழ்வில் இருப்பவர்கள் கவனிக்கவும் கருத்தில் கொள்ளவும் இந்த அமெரிக்கச் செய்தியில் அடங்கியிருப்பவை ஏராளம்!"

கோ. சி. மணி வெற்றிக்கு உழைப்பீர்!

தஞ்சை மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிப்பதாவது:—

"27—3—68 காலை 10-மணியளவில் குடந்தை தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற வட்டச் செயலாளர்கள்—நகரச் செயலாளர்கள் கூட்டத்தில், தஞ்சை மாவட்டச் சார்பில் உள்ளாட்சி துறைத் தொகுதியில் 8—4—68-ல் நடைபெறவிருக்கும் சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கு வேட்பாளராக நிற்கும் திரு. கோ. சி. மணியின் வெற்றிக்குக் கழகத் தோழர்கள் தீவிரமாகப் பணியாற்றுவதென ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, மாவட்டக் குழு உறுப்பினர்கள்—கழக அமைப்புகளின் செயலாளர்கள்—சட்டமன்ற, பொதுக்குழு உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் அனைவரும், திரு. கோ. சி. மணி முதல் வாக்குப் பெற்று வெற்றி பெறத் தீவிரமாகப் வாக்குகள் சேகரிக்கும் பணியில் ஈடுபட வேண்டுகிறேன்."

சேலம், ஜூலை 2—

சேலம் மாவட்டத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்ரேர் இடத்திற்கு அரிசி, நெல் ஆகியவைகளைக் கொண்டு செல்வது சம்பந்தமாக உள்ள கட்டுப்பாட்டை நீக்கி, மாவட்ட கலெக்டர் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

4--4--68

சென்னை 96-வது வட்டம்

கலைஞர் பொதுப் பணி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு புதூர் அசோக் நகரில்; தலைவர்: மு. முருகேசன்; பேசுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., நடிகர் என்.எஸ். நாராயணன், சைதை சம்பந்தம் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., எம். குமார், அமுதாராகவன், எம். இந்திரா, கோ. அய்யாவு, மா. ந. செயச்சந்திரன், டி. ஆர். செயராமன்.

5--4--68

திண்டுக்கல்

முத்தமிழ் மன்றத் துவக்க விழா; மாலை 7-மணிக்கு தெற்கு ரதவீதியில்; தலைவர்: க. வே. வி. இராசன்; பேசுவோர்: என். எஸ். இளங்கோ, அ. தங்கவேலு, மா. தங்கவேலர், மா. ஆனந்தன், மற்றும் பலர். (மு. காதர்சா கொடியேற்றிவைப்பார்.)

நல்லம்மாபட்டி

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு நக்கலப்பட்டியில்; தலைவர்: மு. சிவனாண்டி; பேசுவோர்: ஆ. திராவிடமணி, மா. கோட்டை, தமிழ்மாறன், பி. எஸ். மாணிக்கம், நடராசன்; தங்கராசு, சக்கரவர்த்தி, கே. என். இராசு, கே. கே. மணி.

மேலப்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பசார் திடலில்; தலைவர்: கா. மு. சமத்; பேசுவோர்: எட்மண்ட் எம்.எல்.ஏ., திராவிடமணி, சனுர்த்தனம் பி.எஸ்.சி., செ. கா. மு. யூசப் எம். சி., நெ. மு. அபூபக்கர் எம்.சி., கி. மீ. காஜா, பி. எஸ். மசூத்.

சிந்துவெளித் தமிழ்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே செங்கற்களால் ஆன வீடுகளே அதிகமாகவும் இருந்தாலும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து அவர்களுக்கு வசதி ஏற்பட ஒவ்வொருவரும் செங்கற்களால் ஆன வீடுகளைக் கட்டிக்கொள்ள இப்படிப்பட்ட தொழிலகங்கள் இன்றியமையாதனவாகும்.

பொதுத் துறையினராலும், தனியாரின் முயற்சியாலும் தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது கட்டிடங்கள் வளருகின்ற நேரத்தில்—நம்முடைய நாட்டைப் பொறுத்த அளவில் பரப்பளவில் முடியாமல்போகும் நேரத்தில்—நாம், வானத்தை நோக்கித்தான் மாடிகளை உயர்த்தி எழுப்பவேண்டிய நிலை எதிர்காலத்தில் வரும்.

உற்பத்தித் திறனைக் கற்றுத் தர யுகோ நாட்டிலிருந்து வந்துள்ள நிறுவனத்தினருக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலைக்கு இங்கேயுள்ள கிண்டி, ஆவடி, அம்பத்தூர் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களையே பயன்படுத்துவது—ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றெரு தொழிற்சாலைக்குப் பயன்படுத்திக் கொள்வது—அரசாங்கத்திற்கே பயன்படுத்திக் கொள்வது—அரசாங்கத்தின் பணம் அரசாங்கத்திற்கே பயன்படும் வகையில் இருக்கிறது!"

துப்பறியும் நாய்களின்

(2-ம் பக்கத்தின் தொர்டர்ச்சி)

கேள்வி:—"மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் துப்பறியும் நாய்கள் பயன்படுத்தப்படுமா?"

பதில்:—"மனித மோப்பத்தினுலேயே அவைகளைக் கண்டுபிடித்துவிடலாம்!" (சிரிப்பு)